# ஸ்ரீதணிகை பஞ்சாங்கம் - பாலு சரவண சர்மா

பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர், ஜோதிஷர், பஞ்சாங்க கணிதக்ஞர்
9, 4வது தெரு, கல்யாண நகர், மேற்கு தாம்பரம், சென்னை 45, கைபேசி: 98403 69677
prohithar@gmail.com www.prohithar.com www.thanigaipanchangam.com


## ஆடி மாத மடல் (ஜய வருடம் - 2014)

**◆ ஆடி மாத பிறப்பு (தக்ஷிணாயனம்)**

திருக்கணிதம்: புதன் 16.7.2014 அன்று இரவு 9:52 மணி அளவில் ரவி கடக பிரவேஸம் (தக்ஷிணாயனம்)

வாக்கியம்: வியாழன் 17.7.2014 அன்று காலை 4:32 மணி அளவில் ரவி கடக பிரவேஸம் (தக்ஷிணாயனம்)

**தக்ஷிணாயன புண்யகாலம்: (தர்பணம் மற்றும் மூதாதையர் வழிபாடு)**

தக்ஷிணாயனம் துவங்கும் முன் 8 மணி நேரம் (20 நாழிகை) புன்னியகாலமாகும் இந்த காலத்தில் தர்பணம், ஜபம் செய்தல் நன்று புன்னியகால துவக்கம் : 16.7.2014 புதன் பகல் 1:52 மணிக்கு மேல் அபரான்ன காலத்தில் தர்பணம் செய்தல் மிகவும் நன்று,

**◆ ஆடி வெள்ளி**

இந்தாண்டு ஆடி மாதத்தில் 5 வெள்ளிக்கிழமைகள் வருகிறது. இத்தினங்களில் ஏழை சுமங்கலிகளுக்கு புடவை எடுத்து தருதல், தாம்பூலம் தருதல் மங்களத்தை தரும். ஏதேனும் ஒரு வெள்ளிக்கிழமையில் ஆதரவற்ற இல்லத்தில் நல்லெண்ணைய் தானம் செய்தால் ஆயிரம் தீபங்கள் ஏற்றிய புண்ணியம் கிட்டும்

**ஆடி கிருத்திகை 21.7.2014 திங்கள்**

முருகனுக்கு மிகவும் உகந்த விசேஷ நாட்களில் ஒன்றான இன்று இறைவனை வணங்கி சேவித்தால் எதிரிகள் தொல்லை நீங்கி வாழ்வு வளம் பெறும், சந்தான பாக்கியம் கிட்டும். இன்று அறுபடைவீடுகளில் இறைவன் தெப்பத்தில் திருஉலா வரும் நாளாகும்.

**◆ ஆடி அமாவாசை 26.7.2014 சனி**

தட்சிணாயன புன்யகாலத்தில் வரும் முதல் அமாவாசையான ஆடி மாத அமாவாசை முன்னோர் நினவாக வழிபட மிகவும் உகந்த நாள். இந்த நாளில் தர்பணம் செய்து, ஆதரவற்ற முதியோர்களுக்கு தானம் செய்வது நன்று. காலையில் பசுவிற்கு கோதுமை தவிடு 2 கிலோ, வெல்லம் 200 கிராம், அகத்திகீரை கலந்து பசுவிற்கு தானம் செய்யவும்.

**◆ வாஸ்து நாள் 27.7.2014 ஞாயிறு**

காலை 6:41 முதல் காலை 8:11 வரை வாஸ்து பூஜை - பூமி பூஜை செய்ய நன்று

தனுர் இராசியில் பிறந்தவர்களுக்கு அன்று சந்திராஷ்ம தோஷம் உள்ளது எனவே அவர்கள் வாஸ்து பூஜையை தவிர்க்கவும்

**◆ ஆடி பூரம் 30.7.2014 புதன்**

சைவத்திருக்கோவில்களில் அகிலத்தை காத்தருள அம்பாள் அவதாரம் எடுத்த திருநாளாக கொண்டாடப்படுகிறது. அபிராம பட்டருக்கு அம்பாள் காட்சியளத்த சோழவளநாட்டின் திருத்தலமான திருக்கடவூரில் இன்று மிகவும் சிறப்பான ஆராதனைகள் நடைபெறும்

வைணவ திருக்கோவில்களில் சூடிக்கொடுத்த சுடர்கொடி ஆண்டாள் அவதரித்த திருநளாக விமரிசையாக கொண்டாடப்படுகிறது குறிப்பாக ஸ்ரீவில்லிபுத்தூரின் பிரதான திருநாளும் இதுவேயாகும்.

**◆ நாக பூஜை - கருட பூஜை**

**நாக சதுர்த்தி 31.7.2014 வியாழன்**

அனைத்து தெய்வங்களின் கழுத்திலும் சுற்றிக்கொண்டு தெய்வத்தின் தலையில் குடைபோல் பாதுகாக்கும் நாகத்தை வழிபடும் நாளாகும் இன்று உடன் பிறந்த சகோதரர்களின் நலமுடன் விளங்க வேண்டி சகோதரிகள் அருகில் உள்ள அம்மன் கோவில் அல்லது பாம்பு புற்றுக்கு நாக தேவதைக்குப் பூஜை செய்து, புற்றுக்குப் பால் ஊற்றி, புற்றுமண்ணைப் பிரசாதமாக அணிந்து கொள்ளவும். பின்னர் சகோதரர்களுக்கும் காதில் புற்றுமண்ணை சாற்றவும்.

புற்றில் பால் ஊற்றும் பொழுது வாசுகி, கிஷகாலன், அப்ஜன், மகரி அப்ஜன், கங்குபாலன், கார்க்கோடன், குளிஜன், பத்மன் ஒன்பது நாக தேவதைகளின் திருநாமத்தை கூறவேண்டும்

ஜாதகத்தில் சர்ப (ராகு-கேது) தோஷம் உள்ளவர்கள் இந்நாளில் அருகில் உள்ள உயிரியல் பூங்காவில் வசிக்கும் பாம்பின் பராமரிப்பு செலவிற்கு நிதி உதவி செய்யலாம். வண்டலூர் உயிரியல் பூங்காவிலும் இந்த ஏற்பாடு உள்ளது.

**நாக பஞ்சமி மற்றும் கருட பஞ்சமி 01.8.2014 வெள்ளி**

நாக பஞ்சமி விரதத்தால் புத்திர பாக்கியம் உண்டாகும். புத்திர பாக்கியம் உள்ளவர்கள் இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பதால், புத்திரர்கள் தீர்க்க ஆயுளுடன் வாழ்வார்கள். அன்று மாலை பெருமாள் கோவிலுக்கு சென்று கருட தரிசிப்பது நற்பலன் தரும்.

**◆ சுக்ல சஷ்டி 02.8.2014 சனி**

ஆடி மாத வளர்பிறை சஷ்டி தமிழ்கடவுள் முருகனுக்கு மிகவும் விசேஷமான நாளாகும் . இந்நாளில் விரதம் இருந்து திருப்புகழ் பாடி இறைவனை வழிபடுவதால் எதிரிகள் தொல்லை, தொழில் போட்டி விலகும். மேலும் முன்னாள் 1.8.2014 அன்று வெள்ளியுடன் சுக்ல சஷ்டி உள்ள நாளில் முருகனை பாடல்களை பாடி வழிபடுவதால் நோய் நீங்கும், செவ்வாய் தோஷ நிவர்த்தியடையும்.

**ஆடி அமாவாசை அன்று வேத பாடசாலைகளுக்கு அரிசி, காய்கறிகள், துணி, எழுதுபொருள் தானம் செய்வது புன்னியம் தரும்**

◆ **ஆடி பெருக்கு 03.8.2014 ஞாயிறு**

18ம் பெருக்கு என்று அழைக்கப்படும் இந்நாளில் கன்னியர் திருமணம் வேண்டியும், திருமணமான தம்பதி நீண்ட நாள் மங்களகரமாக வாழவும் வேண்டி ஆற்றில், நீர்நிலையில் வழிபாடு செய்து தீபம் ஏற்றும் நாளாகும்.

---

◆ **வரலட்சுமி விரதம் 08.8.2014 வெள்ளி**

சாந்திரமான சிராவண மாத பௌர்ணமிக்கு முன்னர் வரும் வெள்ளிக்கிழமை ஸ்ரீலட்சுமிக்கு மிகவும் உகந்த நாள், சுமங்கலிகளுக்கான சிறப்பான நாளும்கூட. இத்தினத்தில் வேண்டும் வரத்தை தரும் ஸ்ரீலட்சுமியை வரலட்சுமி ஸ்வரூபமாக வழிபடுதல் மங்களத்தை தரும்.

---

◆ **ரக்ஷ பந்தனம் 10.8.2014 ஞாயிறு**

சகோதரிகள் சகோதரத்துவத்தை போற்றும் வகையில் தன் சகோதரன் அர்ஜுனைப்போல் வீரமுடனும், பலமுடன் விளங்க இறைவனை வேண்டி சகோதரனுக்கு கையில் காப்பு கட்டும் நாளாகும்.

இந்நாளில் தான் கி.பி. 1303ம் ஆண்டு சித்தூர்கரை (ராஜஸ்தான் ) டெல்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜி தாக்க வரும் போது ராணி பத்மினி அண்டை நாட்டு மன்னர்களுக்கு ராக்கி அனுப்பியதாக சரித்திரக் குறிப்புகள் உள்ளன. இதன் மூலம் தன் சகோதரியைக் காக்க அந்த மன்னர்கள் தங்கள் படைகளை அனுப்பி அலாவுதீன் கில்ஜியுடன் போரிட்டார்கள்

---

◆ **ஆவணி அவிட்டம் 10.8.2014 ஞாயிறு**

யஜுர் வேதிகள் பூனூல் தரித்து காயத்தரியை வணங்கும் நாளாகும். யஜுர் வேதிகள் உபகர்மாவை இன்றும் மறுநாள் காயத்ரி ஜபம் செய்திடல் வேண்டும்

ருக் வேதிகள் உபாகர்மா ஆவணி 22 (7.9.2014) அன்று கடைபிடிக்கவேண்டும்

ஸாமவேதிகள் விநாயகர் சதுர்த்தி(29.8.2014) அன்று கடைபிடிக்கவேண்டும்

---

◆ **மஹா சங்கடஹர சதுர்த்தி 13.8.2014 புதன்**

விநாயகர் சதுர்த்திக்கு முன்னர் வரும் தேய்பிறை சதுர்த்தி அன்று விநாயகரை வழிபடுவதால் ஒரு வருடம் முழுவதும் விநாயகரை வழிபட்ட பலன் கிட்டும். அன்று யானைக்கு பிடித்தமான கரும்பை உணவாக தருவதால் முதற்கடவுள் அருள் பெற்று அனைத்து சங்கடங்களும் நீங்கும்

---

**சுபநாள் விளக்கம்**

ஆடி 01 வியாழன் 17.7.2014 சுபதினம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் சுபம் செய்ய நன்று.

ஆடி 02 வெள்ளி 18.7.2014
அதிகாலை 4:30 முதல் காலை 6:00 வரை கணபதி ஹோமம் செய்யநன்று.
சூரிய உதயத்திற்கு பின் கரிநாள் துவக்கம்

ஆடி 07 புதன் 23.7.2014 சுபதினம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் நன்று.

ஆடி 08 வியாழன் 24.7.2014
அதிகாலை 4:30 முதல் காலை 6:00 வரை கணபதி ஹோமம் செய்ய நன்று.

ஆடி 11 ஞாயிறு 27.7.2014 வாஸ்து நாள்
வாஸ்து நேரம் : காலை 6:41 - 8:11 வரை

ஆடி 15 வியழான் 31.7.2014
அதிகாலை 4:30 முதல் காலை 6:00 வரை கணபதி ஹோமம் (தெலுங்கர் கிரஹப்பிரவேசம்) நன்று.

16 வெள்ளி 01.8.2014 சுபதினம் - கிரஹப்பிரவேசம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் நன்று.

ஆடி 18 ஞாயிறு 03.8.2014 சுபதினம்
அதிகாலை முதல் மாலை 6 மணி வரை அனைத்து சுபம் செய்ய நன்று. (கிரஹப்பிரவேசம்)

ஆடி 21 புதன் 06.8.2014
அதிகாலை முதல் பகல் 10:30 மணி வரை அனைத்து சுபம் செய்ய நன்று. (கிரஹப்பிரவேசம்)

ஆடி 22 வியழான் 07.8.2014 காலை 9:30 மணி மேல் நன்று
பித்ரு பூஜை - தில ஹோமம்.

ஆடி 23 வெள்ளி 08.8.2014
அதிகாலை 4:30 முதல் காலை 6:00 நன்று.
கிரஹப்பிரவேசம், 6-7 திருமணம் நன்று.

ஆடி 25 ஞாயிறு 10.8.2014 பௌர்ணமி - சுபதினம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் நன்று.

ஆடி 28 புதன் 13.8.2014
பகல் 3 மணி மேல் நன்று. நிச்சியதார்த்தம், மஞ்சள் நீராட்டு.

ஆடி 29 வியாழன் 14.8.2014 சுபதினம்- கிரஹப்பிரவேசம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் நன்று.
உதயத்தில் சதுர்த்தி கணபதிஹோமம் நன்று.

ஆடி 30 வெள்ளி 15.8.2014 சுபதினம்
அதிகாலை முதல் நாள் முழுவதும் நன்று.

---

◆ மூதாதையர் வழிபாடு நாட்கள் (பிதுர் பூஜை, புனித பயனம்)

ஜுலை:17,19, 20, 22, 26, 27, 28 ஆகஸ்ட்: 4, 5, 7, 10,11,16

## ◈ கணபதி ஹோம நாட்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17.7.2014 | வியாழன் | 31.7.2014 | வியாழன் | 08.8.2014 | வெள்ளி |
| 18.7.2014 | வெள்ளி | 01.8.2014 | வெள்ளி | 10.8.2014 | ஞாயிறு |
| 23.7.2014 | புதன் | 03.8.2014 | ஞாயிறு | 14.8.2014 | வியாழன் |
| 24.7.2014 | வியாழன் | 06.8.2014 | புதன் | 15.8.2014 | வெள்ளி |

## ◈ கிரஹப்பிரவேஸ நாட்கள் - தெலுங்கர்களுக்கு சிராவண (ஆவணி) மாதம் அடிப்படையில்

| | |
|---|---|
| 31.7.2014 வியாழன் | அதிகாலை 4:30- 6 |
| 01.8.2014 வெள்ளி | அதிகாலை 4:30- 7, காலை 9 - 10:30 |
| 03.8.2014 ஞாயிறு | அதிகாலை 4:45 - 6:30, காலை 9 - பகல் 12 |
| 06.8.2014 புதன் | அதிகாலை 5 - 6:30, காலை 9 - 10:30 |
| 07.8.2014 வியாழன் | காலை 9:30- பகல் 1:30 |
| 08.8.2014 வெள்ளி | அதிகாலை 4:30- 6 |
| 14.8.2014 வியாழன் | அதிகாலை 4 - 6, காலை 8:15 - பகல் 1:30, |
| 15.8.2014 வெள்ளி | அதிகாலை 4:30 - 6, பகல் 10 - 10:30 |

**கிராமத்தில் உள்ள அம்மன் கோவில்களுக்கு மின்சார கட்டணம் செலுத்தினால் மாதம் முழுவதும் விளக்கேற்றிய பலன் கிடைக்கும்**

## ◈ மாலை நேர சுபநாள்

| | | | |
|---|---|---|---|
| 17.7.2014 | வியாழன் | 13.8.2014 | புதன் |
| 23.7.2014 | புதன் | 14.8.2014 | வியாழன் |
| 01.8.2014 | வெள்ளி | 15.8.2014 | வெள்ளி |
| 07.8.2014 | வியாழன் | | |

## ◈ விரதாதி நாட்கள்

ஆடி கிருத்திகை 21.7.2014 திங்கள்
கிருஷ்ண ஏகாதசி 22.7.2014 செவ்வாய்
கிருஷ்ண திரியோதசி 24.7.2014 வியாழன்
கிருஷ்ண சதுர்தசி 25.7.2014 வெள்ளி
ஆடி அமாவாசை 26.7.2014 சனி
ஆடி பூரம் 30.7.2014 புதன்
சுக்ல சதுர்த்தி 31.7.2014 வியாழன்
நாக சதுர்த்தி 31.7.2014 வியாழன்
நாக பஞ்சமி 01.8.2014 வெள்ளி
சுக்ல சஷ்டி 02.8.2014 சனி
ஆடி பெருக்கு03.8.2014 ஞாயிறு
சுக்ல ஏகாதசி 07.8.2014 வியாழன்
சுக்ல திரியோதசி 08.8.2014 வெள்ளி
வரலட்சுமி விரதம்08.8.2014 வெள்ளி
ரக்ஷ் பந்தனம் 10.8.2014 ஞாயிறு
ஆவணி அவிட்டம் 10.8.2014 ஞாயிறு
யஜுர் உபாகர்மா 10.8.2014 ஞாயிறு
சிரவணம் 10.8.2014 ஞாயிறு
சங்கடஹ சதுர்த்தி 13.8.2014 புதன்

## ◈ அஷ்டம சுத்தியான லக்னம்

| | |
|---|---|
| 17.7.2014 வியாழன் | காலை 7:30 - 8, பகல் 10 - நன் பகல் 1:30, இரவு 6:30 - 8:15, இரவு 11:30 - 12 |
| 23.7.2014 புதன் | அதிகாலை 3:30 - 7:30, காலை 9: 40 - பகல் 11:30, இரவு 6 - 7:45, இரவு 11:20 - 12 |
| 01.8.2014 வெள்ளி | அதிகாலை 4:30- 7, காலை 9 - 10:30, பகல் 12 - 1, மாலை 5:30 - 7:15 |
| 03.8.2014 ஞாயிறு | அதிகாலை 4:45 - 6:30, காலை 9 - பகல் 12, மாலை 5:30 - மாலை 6 மணி |
| 06.8.2014 புதன் | அதிகாலை 5 - 6:30, காலை 9 - 10:30 |
| 07.8.2014 வியாழன் | காலை 9:30- பகல் 1:30, மாலை 5 - மாலை 7 |
| 10.8.2014 ஞாயிறு | அதிகாலை 4:15 - 6:25, காலை 8:30 - பகல் 12, பிற் பகல் 1:30 - 2:40, மாலை 6 - மாலை 6:50 |
| 14.8.2014 வியாழன் | அதிகாலை 4 - 6, காலை 8:15 - பகல் 1:30, இரவு 10 - 11:40 |
| 15.8.2014 வெள்ளி | அதிகாலை 4:30 - 6, பகல் 10 - 10:30, நன் பகல் 12 - 2:25, இரவு 9:50 - 11:30 |

## ◈ சீமந்தம்

| | |
|---|---|
| 17.7.2014 வியாழன் | காலை 7:30 - 8, பகல் 10 - நன் பகல் 1:30, இரவு 6:30 - 8:15 |
| 23.7.2014 புதன் | காலை 9: 40 - பகல் 11:30, இரவு 6 - 7:45 |
| 01.8.2014 வெள்ளி | காலை 9 - 10:30, பகல் 12 - 1, மாலை 5:30 - 7:15 |
| 03.8.2014 ஞாயிறு | காலை 9 - பகல் 12, மாலை 5:30 - மாலை 6 மணி |
| 06.8.2014 புதன் | காலை 9 - 10:30 |
| 07.8.2014 வியாழன் | காலை 9:30- பகல் 1:30, மாலை 5 - மாலை 7 |
| 14.8.2014 வியாழன் | காலை 8:15 - பகல் 1:30 |
| 15.8.2014 வெள்ளி | பகல் 10 - 10:30, நன் பகல் 12 - 2:25 |

## ◈ சாந்தி முகூர்த்தம்

| | |
|---|---|
| 17.7.2014 வியாழன் | இரவு 7:30 - 8:15, இரவு 11:30 - 12 |
| 23.7.2014 புதன் | இரவு 11:20 - 12 |
| 01.8.2014 வெள்ளி | இரவு 10:45 - 12 |
| 07.8.2014 வியாழன் | இரவு 10:30 - 12 |
| 13.8.2014 புதன் | இரவு 10 - 11:30 |
| 14.8.2014 வியாழன் | இரவு 10 - 11:30 |
| 15.8.2014 வெள்ளி | இரவு 9:50 - 11:30 |

## ◈ தளம் போட

| | | |
|---|---|---|
| 17.7.2014 வியாழன் | காலை 7:30 - 8, பகல் 10 - நன் பகல் 1:30 |
| 23.7.2014 புதன் | காலை 6 - 7:30, காலை 9: 40 - பகல் 11:30 |
| 01.8.2014 வெள்ளி | காலை 6- 7, காலை 9 - 10:30, பகல் 12 - 1 |
| 03.8.2014 ஞாயிறு | காலை 6 - 6:30, காலை 9 - பகல் 12, மாலை 5:30 - 6 |
| 06.8.2014 புதன் | அதிகாலை 5 - 6:30, காலை 9 - 10:30 |
| 07.8.2014 வியாழன் | காலை 9:30- பகல் 1:30 |
| 10.8.2014 ஞாயிறு | காலை 8:30 - பகல் 12, பிற் பகல் 1:30 - 2:40 |
| 14.8.2014 வியாழன் | காலை 8:15 - பகல் 1:30 |
| 15.8.2014 வெள்ளி | பகல் 10 - 10:30, நன் பகல் 12 - 2:25 |

**ஆவணி மாத கிரஹப்பிரவேஸ நாட்கள்**

| | |
|---|---|
| 20.8.2014 புதன் | 07.9.2014 ஞாயிறு |
| 22.8.2014 வெள்ளி | 08.9.2014 திங்கள் |
| 27.8.2014 புதன் | 10.9.2014 புதன் |
| 28.8.2014 வியாழன் | 11.9.2014 வியாழன் |
| 29.8.2014 வெள்ளி | 12.9.2014 வெள்ளி |
| 31.8.2014 ஞாயிறு | 15.9.2014 திங்கள் |
| 04.9.2014 வியாழன் | |

## ◈ வணிகப்பணி, வாகனம் வாங்க, காது குத்தல்

| | |
|---|---|
| 17.7.2014 வியாழன் | காலை 7:30 - 8, பகல் 10 - நன் பகல் 1:30, இரவு 6:30 - 8:15 |
| 23.7.2014 புதன் | அதிகாலை 3:30 - 7:30, காலை 9: 40 - பகல் 11:30, இரவு 6 - 7:45 |
| 01.8.2014 வெள்ளி | அதிகாலை 4:30- 7, காலை 9 - 10:30, பகல் 12 - 1, மாலை 5:30 - 7:15 |
| 03.8.2014 ஞாயிறு | அதிகாலை 4:45 - 6:30, காலை 9 - பகல் 12, மாலை 5:30 - மாலை 6 மணி |
| 06.8.2014 புதன் | அதிகாலை 5 - 6:30, காலை 9 - 10:30 |
| 07.8.2014 வியாழன் | காலை 9:30- பகல் 1:30, மாலை 5 - மாலை 7 |
| 10.8.2014 ஞாயிறு | அதிகாலை 4:15 - 6:25, காலை 8:30 - பகல் 12, பிற் பகல் 1:30 - 2:40, மாலை 6 - மாலை 6:50 |
| 14.8.2014 வியாழன் | அதிகாலை 4 - 6, காலை 8:15 - பகல் 1:30 |
| 15.8.2014 வெள்ளி | அதிகாலை 4:30 - 6, பகல் 10 - 10:30, நன் பகல் 12 - 2:25 |

## ◈ ஆடி மாத முகூர்த்த நாள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | புதன் | 23.07.2014 | தே.துவாதசி | ரோகிணி | சி | கடகம் | 06:00 - 07:00 |
| 16 | வெள்ளி | 01.08.2014 | வ.பஞ்சமி | அஸ்தம் | அ | கன் னி | 09:30 - 10:30 |
| 18 | ஞாயிறு | 03.08.2014 | வ.சப்தமி | சுவாதி | சி | சிம்மம் | 07:30 - 09:00 |
| 22 | வியாழன் | 07.08.2014 | வ.துவாதசி | மூலம் | சி | துலாம் | 11:00 - 12:00 |
| 29 | வியாழன் | 14.08.2014 | தே.சதுரத்தி | உத்திரட்டாதி | சி | கன் னி | 09:00 - 10:30 |
| 30 | வெள்ளி | 15.08.2014 | தே.பஞ்சமி | ரேவதி | சி | சிம்மம் | 06:30 - 08:00 |

## ◈ வானியல் தகவல்

| *நிகழ்வு* | *தேதி* | *நேரம்* | *குறிப்பு* |
|---|---|---|---|
| ரோகினி நிலவு சேர்கை | 2014 Jul 22 | 18 | 1.82° South |
| சுக்கிரன் நிலவு சேர்கை | 2014 Jul 25 | 00 | 4.42° North |
| குரு சூரிய சேர்கை | 2014 Jul 25 | 02 | 0.40° North |
| புதன் நிலவு சேர்கை | 2014 Jul 25 | 21 | 5.11° North |
| புணர்பூசம் சேர்கை நிலவு | 2014 Jul 26 | 11 | 11.87° North |
| குரு நிலவு சேர்கை | 2014 Jul 27 | 04 | 5.46° North |
| அமாவாசை நிலவு | 2014 Jul 27 | 04 | 406068.342 km |
| நிலவு தொலைவுநிலையில் | 2014 Jul 28 | 09 | 406548.073 km |
| புணர்பூசம் புதன் சேர்கை | 2014 Jul 29 | 11 | 6.05° North |
| மகம் நிலவு சேர்கை | 2014 Jul 29 | 12 | 4.65° North |
| சித்திரை நிலவு சேர்கை | 2014 Aug 2 | 19 | 2.33° South |
| குரு புதன் சேர்கை | 2014 Aug 2 | 22 | 0.96° South |
| செவ்வாய் நிலவு சேர்கை | 2014 Aug 3 | 16 | 2.22° South |
| சனி நிலவு சேர்கை | 2014 Aug 4 | 16 | 0.07° North |
| புணர்பூசம் சுக்கிரன் சேர்கை | 2014 Aug 8 | 02 | 6.58° North |
| புதன் சூரிய வெளிசேர்க்கை | 2014 Aug 8 | 22 | 1.74° North |
| நிலவு அன் மை நிலையில் | 2014 Aug 10 | 23 | 356947.369 km |
| முழு நிலவு | 2014 Aug 11 | 00 | 356895.935 km |
| மகம் புதன் சேர்கை | 2014 Aug 15 | 17 | 1.27° South |

**வறுமையில் வாடும் கிராமிய கலைஞர்கள் இந்த மாதத்தில் மட்டுமே தங்களின் கலைகளை கொண்டு பிழைக்கிறார்கள். அவர்களின் திறமை வெளிப்படுத்தும் மாதமிது.**

**தமிழகத்தின் கலாசாரத்தை இம்மாதத்திலேதான் அழகாக காண முடியும். கிராமிய கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்களுக்கு தங்களால் இயன்ற நிதியுதவி, பொருளுதவி செய்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுங்கள்.**